உ

கடவுள் துணை.

திரிசிரபுரம்

சமையபுரத்தில் எழுந்தருளிய

மாரியம்மன் பதிகம்.

சென்னை:

B. இரத்தின நாயகர் அண்டு சன்ஸ்

அவர்களது

திருமகள் விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1923

சிவமயம்.

திரிசிரபுரம் உறையூர் மின்னப்பன்தெருவு

ம—ள—ள—ஸ்ரீ

அ. ஆதித்தனெனும் அன்பராலியற்றியது.

அணிகள்பலபூஸ்திதிக ளினிவாய்திரட்டிவைத்
தையமென்றேர்தமக்கு
அணுவாகிலுமிரங் கியாதமனமுளோர்க்
கன்றுசந் ததிகளோங்கி
மணிகள்தினம்வாரியிப் புவிமீதிரப்பவர்க்
கீந்துபவமறுமன்னர்போல்
அமரர்துதிசமயபுர மாகாளிதேவியின்
னருள்பெரும் இனியதொண்டன்
கனிகள்மிகுசுவைபோல யிலகுநகுமலருற்ற
கமழுமுக் கண்ணிபதிகம்
கடினமனமிருள்கெடக் கிரவிசந்திரனெனக்
கருதினுரிவ் வரையின்மேல்
பணிகள்நவமணிபூண் டிலங்குதாமரையினடி
பண்பாய்மிகத் துதித்து
பலன்பெற்றிடுந்தேசிகன் கந்தசாமியுரை
பகரயிது தருணமிதுவே.

———

ஷையூர் பாண்டமங்கலம் ம-ள-ள-ஸ்ரீ,
பாண்டியபிள்ளை அவர்கள்
இயற்றியது.

சீர்மிகுந்தசமயபுரத் தலத்துறையுமகமாயி
சிறப்பைநன்றுய்
கார்பொழிந்துபயிர்செழித்த குணமதுபோல்
உயிர்கள்மனக் கஞ்சம்பூக்க
பார்புகழ்ந்தபதிகமெனுங் ககவாலே
யாய்ந்தெடுத்தார் பக்திபூண்டு
வார்புனைந்தகௌரிபதம் வணங்குகந்த
சாமியெனும் வல்லோன்மாதோ.

வெண்பா.

திருமருவுசமயபுரத் தேவிமகமாயிதன்மேல
நருமலர்சேர்பாமாலே நாட்டுதற்கு-இருவினையை
போக்குமறுமுகர்க்கும்பொன்வெள்ளிமேனியற்கும்
கார்க்கும் கரிமுகற்குங் காப்பு

மாரியம்மன் பதிகம்.

பொங்குங்கடலேசூழ்ந்த சிங்காரமானதொருபூ
தலவிலாசமெங்கும், புகழ்கொண்டகீர்த்திபிரதாபம
துவாகவும் போதரவதாயமர்ந்த, நங்கையபிராமிகிரு
பாகரிமநோன்மணி நானிலமுந்துதிக்கும் ஞானத்
துவமாயிமோனநிஷ்களவாயிநாடினோர்வல்வினைதனை
பங்கமதுவாக்கியவர் தீவினைவிலக்கியுன்பாததாமரை

நல்குவாய்,பாலரெலாங்கொண்டாடும் பூரணதயாநிதி பவளவதனத்தியார்க்குஞ்சங்கநிதிபத்மநிதியாகவருள்தருகவே சமயபுரமதனில்மேவுஞ் சற்குணமிகுந்த மாகாளிகாங்காளி யேசத்திமாயி உமையே. 1

அன்னுளில்வடதேச மதிலிருந்தன்பர்களனைத்தையும்கார்ப்பதற்காய், அக்கினிக்கும்பமொன்றேந்தியகரத்துடன் அருள்கிருபைவிழிபார்வையாய்,கண்ணுயிரங்கொண்டகருணைசமுத்திரமே கனகசிம்மாசனத்தில்,காரணிசீரணிதாரணியிலுன்மகிமைகருதொணுதொருவவராலும், விண்ணோர்களும் புவியிலுள்ளோர்களும்பரவும்வேதவேதாந்தநிமலிவேதியர்குலத்துதித்தாயிமகமாயி யென்வினைத்துயர மகற்றியருள்வாய், சன்னுகைமுடன்மிக்க கன்னபுரமுஞ்சூழ்ந்த சமயபுரமதனில்மேவும், சற்குணமிகுந்தமா காளிகங்காளியே சத்தியமகமாயி உமையே. 2

காரொழுகுகூந்தலில் சுட்டிசடைநாகமுங் கதிரொளிகள் போல்மின்னவும், கனகநவரத்தினஜிமிக்கைமுத்தாரமுங்கருணைவிழிபார்வையழகும், வாரொழுகுஸ்தனபாரம்தனிபதக்கமும்வர்ணநிரமானகிளியும் வண்மைபெருகணையாழியணிவிரலினழகையும் வர்ணிக்கமொருவர்வசமோ ஏரொழுகுபட்டாடைமீதிலொட்டியாணமுமியல்நூபுரத்தண்டையும்,எங்

குழுளோர்பணியுமிங்கிதபதத்தினிலியல்மெட்டிபீலி யழகும்,சாரமதுரந்தரத் தேர்தனில்பவுனியாய்சமய புரமதனில்மேவும், சற்குணமுகுந்தமா காளிகங்கா ளியே சத்திமாயிஉமையே. 3

அண்டரங்களும் புகழ்பெற்றமாரியே அம்மை களனேகவிதமாய், அவனிதனில் வார்த்தபோதுன துபெருமகிமைதனை அவரவர்களேநினைந்து, கெண்ட னஞ்செய்துபல பூசைகளனேகமாய் தூபமதுயேந்தி நின்றுந், தேவியித்துயர்தீரு மென்றுன துபதுமலர்க ள்தெரிசித்துநின்றபேர்க்கு,பண்டிதஞ்செய்தவர்கள் தீவினையகற்றிநற்பதவிகந்தருளுமீவாய்,பரிமளமிகுந் தருமலர்மாலையணிகின்ற பதுமாசனத்திவேணி, ச ண்டனதுமதனி லாழ்ந்திடாதருள்புரியசமயபுரமத னில்மேவும், சற்குணமிகுந்த மாகாளிகங்காளியே சத்தியமகமாயிஉமையே. 4

மந்திரசொரூபி ஓங்காரி ஸ்ரீங்காரியெனமன்பர் துதிசெய்துன்னடியை, மரவாமலெப்பொழுதும் வி ரைவாகநாடியே மாந்தர்முனிதேவர்முதலாய், அந்த ரமதாய்வரும் ஊழிபையிலக்குசமன் றஞ்சலிச்செய் துநின்று,அம்பிகாதேவியுன்னிருதயமகிழ்ந்திடஅவ னிதனிலேமனுக்காள்;சந்திகள்பிரிந்துமிகபந்தலொ டுவாத்தியஞ் சகலமணிமேடைசெய்து, சர்வஜனமு ங்கூடிகர்மமெடுத்துனதுதாழ்பணியஆதரிப்பாய்,ந்ச

திரநிகர்வ தனியேகெந் தருவர்கொண்டாடசமயபுரம தனின்மேவுஞ், சற்குணமிகுந்தமா காளிகங்காளியே சத்தியமகமாயிஉமையே. 5

சுந்திரமிகுந்துவளர்கின்றபரிபூரணி சுகுணகல் யாணியுன்றன்,சூட்சாதிசூட்சத்தை ஆச்சியினியார றிவர் தொகைபெறுமகிமையதனை, எந்தனுரைசெ ய்வதெப்படி அம்மணியெப்பிறப்பில்லாமலே,எச்சம் யமுங்கிருபை வைத்துனதுபாதமதிலீடேற்றவருள் புரிகுவாய், கந்தமிகுவாசனை நிறைந்துமலர்சூடிடுங் கருணைவழிகின்றதாயே, கண்மணிக் கினிதாகவுன் மனமிரங்கியென்கவலையறவேசெய்குவாய், சந்ததம் அண்டர்பணிகின்றமாதங்கியே சமயபுரமதனின்மே வும், சற்குணமிகுந்தமா காளியே கங்காளியே சத்தி மகமாயிஉமையே. 6

அன்னைநீதந்தைநீயென்னுடையசுற்றநீ ஆதரவு செய்யுமுமைநீ, அண்டநீபிண்டநீயாவுநீயென்றென துஆச்சியென்றுனையடைந்தேன், வண்ணமால்மாய கைதனில்வாழ்ந்துவிழிமங்காமல் வஞ்சகன்றுடராம லும், வாடித்தவித்துபலவாதனையிலாழ்ந்தாமல்வாய் தந்தம் நழுவாமலும், நன்னயமதாகவம் அண்ண லார்பாதமதில் நாடிவைத்தருளோங்கிய, ஞானதத் துவமெனக்கழிந்துமறுபிறவினில் நானுமேவந்திடா மல், சந்நிதிநிறைந்துவருமன்னரிடர் தீர்க்கவேசமய

புரமதனில்மேவுஞ், சற்குணமிகுந்த மாகாளிகங்கா
ளியே சத்திமகமாயிஉமையே. 7

ஆச்சிரீசூட்சிவிசாலாட்சிகௌமாரியென்றன்பு
டன்றொழுதுவெகுபேர், அங்கப்பிரதட்சணங்கோடு
கள்கிழித்துமே ஆடிவலம்வந்துவெகுபேர், காட்சிக
ள்விளங்குமகமாயிநீயாரென்றுசாரகமதெடுத்து வெ
குபேர், கண்ணடக்கம்நற்புதவாரமதுசெய்துகாணிக்
கைகொண்டுவெகுபேர், கூச்சமில்லாமலேகரும்புள்
ளிசெம்புள்ளி குத்திமணிகட்டிவெகுபேர், கோவில்
வலம் வந்துமாவிளக்கது எடுத்தெங்கள் குறைதீரு
மென்பர்வெகுபேர், சாசுவதமாகநிறை கொலுவாக
வீற்றுநீ சமயபுரமதனில்மேவும், சற்குணமிகுந்தமா
காளிகங்காளியே சத்திமகமாயிஉமையே. 8

புனலந்துபொரிஐந்துபூதாதிஐந்துடன்பொரு
ந்துமிந்திரியமைந்தாய், புகலரியதசவாய்வெணும்தத்
துவமாகயிப்புவியதனிலேயுதித்து, மனமானதத்து
வமிச்சகமாயைதன்னிலேமயங்கியேநிதமும்நொந்து
வாடித்தவித்துவுனைநாடித்துதிப்பர்மேல்மனமுன
திருபைகூர்ந்து, துணிவானயெமதூதர் அணுகாமல்
அனுதினம்துடர்ந்துசாயுச்யமீவாய், துலங்குநின்க
ழல்சோர்வை தனிலுமனமணுகவுஞ் சூட்சியருளே
யுவந்து, சனகாதிமுனிவோர்க ளனவருங்கொண்
டாடசமயபுரமதனின்மேவும், சற்குணமிகுந்தமாகா
ளிகங்களியே சத்திமகமாயிஉமையே. 9

மண்ணினிலிருப்பளவும்மண்மீதிலாசையும்மன
விமைந்தரிலாசையும், மாடாடுவீடுபொன்னுசைதனி
லேமனம்வாடித்தவித்திடால், அண்ணலார்பதமலரி
லாசைவைத்தகமகிழ்ந்தனுதினம்பணிசெய்யவும், ஆ
ச்சிரீகிருபைவைத்தன்னினேயெனக்குமே யருள்புரி
யநாட்செல்லுமோ, முன்னவினையாலுமிசசகமாயை
தனிலுமனமில்லாமல்முக்கண்ணர்பகவனை,சண்மு
கனேயின்றபரன் பகவனுக்கேவைசெய்யும் சமயபுரத்த
னின்மேவும், சற்குணமிகுந்தமா காளிகங்காளியே
சத்திமகமாயிஉமையே. 9

தனிகொண்டிலங்குமித்தாரணியில்மனிதரைத்
தயங்கமனவேறுபாடாய், தத்தளித்திடுபித்த வாத
மெரிகுன்மமுந்தலைவலியோயெழுபிளவையும் அணி
கொண்டிடர்கண்ட மாலையருவீக்கமும் ஆனசொரி
யொடுகுஷ்டமும், அணுகொணுதிமிர்வாய்வு குடல்
வாதமரைபுண்ணு அரையாப்பொடெதுசூலையும்,இ
னிகொள்சப்பினிசங் காமாலைசோகை நளிரீளைகூய
மதுமேகமும்,இடரருங்கிரந்தவை சூரிபெருவாந்தியு
ம்இனியதிருவடிகண்டுடன், சனிபிணிகள்வாடியே
கதிகெட்டுஓடவுஞ் சமயபுரமதனில்மேவுஞ்,சற்குண
மிகுந்தமா காளிகங்காளியே சத்திமகமாயிஉமையே.

மாரியம்மன்பதிகம் முற்றிற்று.

———